**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை -2019**

---

## 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றச் சட்டத்தின் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | IV ஆம் பகுதியின் 12(1) உப பிரிவு | அதிகார சபையின் செயற்பாடுகளை நிர்வகித்தல் மாறும் முகாமைத்ப்படுத்தல் முகாமைத்துவ சபைக்கு ஒப்படைக்க வேண்டி இருந்தும் அதிகார சபையின் நிதிக்கூற்றினை முன்வைக்கும் தினத்தில் முகாமைத்துவம் சபை நியமிக்கப்படாததுடன் அதன் காரணமாக நிதிக் கூற்றக்களின் பொறுப்பினை ஏற்றுக் கொள்வது தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலை உருவாகியிருந்தது. | 2019.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளுக்கான பொறுப்பினை அதிகாரசபையின் முகாமைத்துவ சபைக்கு ஒப்படைத்திருந்த போதும் 2019.11.28 திகதி வெளியிடப்பட்ட PS/SP/SB/CIRCULAR/02/2019 சுற்று நிருபத்தின் படி முகாமைத்துவ சபை விலகியதுடன் இதுவரை நியமிக்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களின் பொறுப்பினை ஏற்பதை அதிகாரசபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நீதி, மனித உரிமை மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் மூலம் செய்யப்பட்டது. | முகாமைத்துவ சபையினை நியமிப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |
| (ii) | 29(5) பிரிவு | அதிகாரசபைக்கு உரித்தான பாதுகாப்பு நிதியமொன்று இருக்க வேண்டியதுடன் நிதியத்தின் வருமானம் செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக முறையாக கணக்குகள் பேண வேண்டிய போதிலும், பாதுகாப்பு நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகார சபையின் ஐந்தொயில் உட்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபை பாதுகாப்பு நிதியத்தின் வருமானம் மற்றும் செலவின கூற்று வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு நிதியத்திலிருந்து இதுவரையில் எந்தவொரு சொத்துக்கு அல்லது பொறுப்புக்கு தொடர்புள்ள கொடுக்கல் வாங்கல் நடக்கவில்லை. அதன்படி அதிகாரசபையின் பாதுகாப்பு நிதியத்தினை குறிப்பு இலக்கம் 16 மூலம் ஐந்தொகையில் உரிமையை தனியாக காட்டவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிரில் பாதுகாப்பு நிதியம் தொடர்பான சொத்து மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் நடக்குமாயின் பாதுகாப்பு நிதியத்திற்கான தனியானதொரு ஐந்தொகை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட மூலத்தின் குறிப்பிடப் பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை பெறுபேறு ரூபா 543,765 மிகையாக இருந்ததுடன் அதற்கு இணையாக சென்ற ஆண்டின் மிகை ரூபா 487,801 ஆக இருந்தது. அதன்படி நிதிப்பெறுபேற்றில் விருத்தி ரூபா 55,964 ஆனது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் போட்டி விலை மனுக் கோரலின்றி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் (BMICH) நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 19/2019 மூலம் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி அதிகாரசபையினால் கொழும்பு மாவட்டத்தில் 06 அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் முதலில் விலை மனுகோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆகக்குறைந்த விலைமனு முன்வைத்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையத்தின் (SLIDA)நடாத்தப்பட்டிருந்தால் அதிகாரசபைக்கு ரூபா 3,094,569 பணத்தினை சேமித்து வைக்கக்கூடியதாக இருந்திருக்கும். | அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுகையில் அதிக சந்தர்ப்பங்களில் மூன்று அரச நிலையங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டதுடன் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுவதில் பலவித செயற்பாட்டு கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட சந்தர்ப்பங்கள் பல. ஆனால் BMICH இல் நிகழ்ச்சித் திட்டம் நடாத்துகையில் அவ்வாறான கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க நேரா இந்த நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபை பத்திரம் 2019/19 மூலம் தேசிய அதிகார சபையினால் நடாத்தப்படும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் BMICH இல் நடாத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. | பெறுகை நோக்கங்களுக்கு அமைவாக செயல்பட வேண்டியமை. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது நிலையத்தின் அன்றாட திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்ட காரியங்களுக்காக ஒதுக்கீட்டினை ஒதுக்கிக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகார சபை மீளாய்வாண்டில் மிகை மதிப்பீடு தயாகைக்கப்பட்டிருந்தமையால் அதில் செலவு செய்யாது சேமிக்கப்பட்டிருந்த ரூபா 17 மில்லியனுக்கான பணத்தினை அமைச்சுக்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் எதிர்பார்த்த படி வாடகை அடிப்படையில் வேறு கட்டிடமொன்று வைத்துக் கொள்ளும் நிலை ஏற்படாததினாலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படாததினாலும் முகாமைத்துவ சேவை திணைக்களத்திலிருந்து பணிப்பாளர் (பராமரிப்பு) பணிப்பாளர் (உதவி) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அனுமதி பெற்றுக் கொடுக்கப் படாமையினால் மீண்டெழும் ஒதுக்கீட்டில் ரூபா 17,000,000 முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் மீண்டும் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது. | இயல்பாகவும் பிழையின்றியும் மதிப்பீடு தயாரிக்க வேண்டியமை. |
| (ஆ) | 26 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணம் ரூபா 785,675 செலவு ரூபா 414,894 ஆகவும் இருந்தமையினால் ரூபா 370,781 அளவை மீதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அது நூற்றுக்கு 25 முதல் நூற்றுக்கு 100 ஆன வீச்சில் இருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்ற வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அளவுக்கு ஏற்றவாறு முற்பணம் பெற்றுக்கொண்டாலும் 100 சதவீதம் பங்குபற்றாமையினால் பெற்றுக்கொண்ட முற்பணம் மிகுதியாகின்றது. நேர்ந்த குறைபாட்டினை இனங்காணப்பட்டதுடன் எதிர்வரும் சந்தர்ப்பங்களில் இந்த குறைபாட்டினை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட காரியத்திற்கு அளவான பணத்தினை மட்டும் முற்பணமாக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியமை. |

## 3.3 நடவடிக்கை வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016, 2017, 2018 மற்றும் 2019 வருடங்களில் அதிகார சபைக்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை முறையே 12, 49, 86 மற்றும் 252 படியாக மொத்தம் 399 ஆயிற்று. நான்கு வருடங்களுக்குள் முடிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 153 ஆனதுடன் அது முறையே 08, 37, 47 மற்றும் 61 ஆயிற்று. அது கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் சதவிகிதப்படி நூற்றுக்கு 66, 75, 55 மற்றும் 24 ஆயிற்று. அதிகார சபையினால் இதுவரை பாதுகாப்புப் பிரிவு அல்லது உதவி கேட்டு அமைக்கப்பட்டு இல்லாமையினால் உதவி கேட்டு செய்யப்பட்ட 16 கோரிக்கைகளின் கருமங்களை சட்டப் பிரிவினால் செய்யப்பட்டிருந்ததுடன் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பாதிப்புக்குள்ளானோர் மற்றும் சாட்சிகளின் ஆதரவாளர் பாதுகாப்பு தரப்பிடம் 81 முறைப்பாடுகள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | 2019 வருட இறுதியாகும் போது அதிகார சபைக்கு கிடைத்த சகல முறைப்பாடுகளுக்குள் 153 முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. அது போன்றே பொலிஸ் நிலையங்களிலிருந்து சட்ட ஆலோசனை கேட்டுள்ள 22 சந்தர்ப்பங்களில் அதிகார சபை ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 24 ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் கொடுக்கப்பட்டுள்ள 14 ஆணை தொடர்பாக பாதுகாப்பு வழங்கப்படுதலும் அதிகார சபையின் தலையீட்டின் கீழ் குற்றத்தில் பாதிப்புக்குள்ளானோர் மற்றும் சாட்சிகளின் ஆதரவாளர் மற்றும் பாதுகாப்பு தரப்பின் உதவியுடன் செய்யப்படுகின்றது.<br><br>அதன்படி அதிகப்படியான முறைப்பாடுகள் அவை சம்பந்தமான சட்ட நடவடிக்கை முடியும் வரை மூடப்படாது வைத்திருப்பதற்கு சபைக்கு நேரும் என்பதனை அறியத் தருகின்றேன். | அதிகார சபையின் பாதுகாப்பு பிரிவு மற்றும் உதவிப் பிரிவு விரைவாக அமைக்கப்பட வேண்டியமை. |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| | நடந்த குறைபாட்டினை தொடர்பாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் அவ்வாறு நடக்காத படி நடவடிக்கை எடுக்கப்படும். | பொது பெறுகை வழிகாட்டல் கோவையில் ஏற்பாடுகளுக் கமைவாக செயல்பட வேண்டியமை. |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| | பணிப்பாளர் வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அனுமதிக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் முன் வைக்கப்பட்டுள்ளது. விசாரணை உத்தியோகத்தர் பதவி ஒன்று வெற்றிடமாக உள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ளபடியால் அப்பதவிகளை நிரப்பும் வரை பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாது. ஊடக உத்தியோகத்தருக்கான வெற்றிடம் 2019.11.20 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் படி மீண்டும் மீளாய்வு செய்து அறிவிக்கும் வரை ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | இப்பதவிகள் வெற்றிடங்களாக இருப்பது நிலையத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேரடி தாக்கத்தினை உண்டு பண்ணுவதால் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |